**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 299** **நாள் : 16.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 3,11,285 தெருமின்விளக்குகள் 100% ஒளிர்வதை உறுதிசெய்யும் வகையில் நேற்று (15.07.2026) இரவு மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் எரியாத 2,798 தெருமின்விளக்குகள் கண்டறியப்பட்டு, அவற்றை உடனடியாக ஒளிரச் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், தெருக்கள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகள், மயானபூமிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மின்விளக்குகளும், உயர்கோபுர மின்விளக்குகளும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3,11,285 மின்விளக்குகள் அனைத்தும் 100% ஒளிர்வதை உறுதி செய்திடும் வகையில், அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்களால் உத்தரவிடப்பட்டது. மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இணை ஆணையாளர் (கல்வி), மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இணை ஆணையாளர் (சுகாதாரம்), தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இணை ஆணையாளர் (பணிகள்) ஆகியோர் வட்டார பொறுப்பு அலுவலர்களும், 1 முதல் 15 மண்டலங்களுக்கும் பொறுப்பு அலுவலர்களாக உயர் அலுவலர்களும் நியமிக்கப்பட்டு நேற்று (15.07.2026) இரவு முழுவதும் 100 சதவீதம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த களஆய்வில் மொத்தமுள்ள 3,11,285 தெருமின்விளக்குகளில் 2,798 தெருமின்விளக்குகள் எரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது.

இவற்றில், மழைநீர் வடிகால் பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பணி, சென்னை மாநகராட்சி குடிநீர் மற்றும் கழிவு வாரியப் பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் 1501 தெருமின்விளக்குகள் எரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இப்பணிகள் நடைபெறும் இடங்களில் தற்காலிக தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதை மின்வட பழுதினால் 352 தெருமின்விளக்குகளும், 945 எண்ணிக்கையிலான எல்இடி (LED) மின்விளக்குகள் எரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றில் 945 எல்இடி (LED) மின்விளக்குகள் 24 மணி நேரத்திற்குள்

சரிசெய்து, புதை மின்வட பழுது 48 மணி நேரத்திற்குள் சரிசெய்து 352 தெருமின்விளக்குகளும் எரிய வைக்கப்படும்.

மேலும், மாநகராட்சி ஆணையர் அவர்கள் உத்தரவின்படி, மரக்கிளைகளால் விளக்குகளின் வெளிச்சம் பாதிக்கப்படும் இடங்கள் கண்டறிந்து மரக்கிளைகள் வாரந்தோறும் அகற்றி தெருவிளக்குகள் நன்கு ஒளிர்வதை உறுதி செய்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தெருவிளக்குகள் பழுது பார்க்கும் சமயத்திலும் மற்ற நேரத்திலும் மரக்கிளைகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மின்விளக்குகள் அனைத்தும் ஒளிர்வதைத் தொடர்ந்து கண்காணித்து அனைத்து மின்விளக்குகளும் நூறு சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திட மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒளிராத மின்விளக்குகள் தொடர்பாக பொதுமக்கள் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**